MR. CHAIRMAN : The question is—

"That rule 42 of the Tamil Nadu Legislative Council Rules be suspended with reference to the limitation laid down in sub-rule (3) thereof and that more than one matter under that rule be permitted to be raised to-day".

The motion was put and carried.

V. CALLING ATTENTION TO MATTERS OF URGENT PUBLIC IMPORTANCE.

(1) NON-PAYMENT OF SALARY TO TEACHERS IN SINGANALLUR MUNICIPAL SCHOOLS AND CONSEQUENT HARDSHIP CAUSED TO THEM.

THIRU V. ISVARMURTI : I like to call the attention of the Hon. the Minister for Education and Local Administration to an urgent matter of public importance, namely, the non-payment of salary to teachers employed in Singanallur Municipal schools from November 1971 and the consequent hardship caused to them.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, சிங்கநல்லூர் நகராட்சியின் ஆரம்பக் கல்விக் கணக்கில் ஏற்பட்டுள்ள பற்றுக் குறையினை ஈடு செய்யும் வகையில் 1966-67 முதல் 1969-70 வரைக்கான ஆண்டுகளுக்குப் பற்றுக்குறை உதவித்தொகை அளிக்கக் கோரி வேண்டுகோள் அரசுக்கு அனுப்பப்பட்டது. அரசு மாநில தலக்கணக்காயரின் உதவியுடன் இப்பிரச்னையை ஆராய்ந்ததில் சிங்கநல்லூர் நகராட்சியானது அரசின் உதவித் தொகையினைப் பெறும் தகுதியை இழந்துள்ளது என முடிவெடுத்துள்ளது. இந்த நகராட்சியின் நிதி நிலையை ஆராய்ந்ததில் இந்நகரவையின் பொதுக் கணக்கு மிகக் கூடுதலான இருப்புடனேயே இவ்வாண்டுகளில் முடிந்திருக்கிறது. இந்நகராட்சி கூடுதலான பொதுக்கணக்கிலிருந்தே இப் பற்றுக்குறையினை நிறைவு செய்திருக்கலாம். மேலும் சமீபத்தில் அரசாணை எண்: 1766 கல்வி 14—10—1971-ல் அரசு இந்நகராட்சிக்கு ரூ. 1,23,852 1971-72-ஆம் ஆண்டுக்கு முன்னுதவித் தொகை அளித்துள்ளது. இந்நகராட்சி முப்பத்தைந்து இலட்ச ரூபாய் வரி பாக்கி வைத்துள்ளது. இதில் கல்வி வரி மட்டுமே ஒன்றேகால் இலட்ச ரூபாய் வரி பாக்கியுள்ளது. இந்த பாக்கி வரி ஒன்றேகால் இலட்சம் ஒழுங்காக வசூலிக்கப்பட்டிருந்தால் இந்த நெருக்கடி இந்த நகரவைக்கு ஏற்பட்டிருக்காது எனக் கருதப்படுகிறது. டிசம்பர் மாதச் சம்பளம் மட்டுந்தான் இன்னும் கொடுக்கப்படவில்லை என்றும், இதில் ரூ. 50 மட்டும் முன்பணமாகக் கொடுக்கப்படுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: On a Point of Clarification. இப்போது கூட அந்த ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படவில்லை என்ற தகவல் இருக்கிறது. ஆகவே ஆசிரியர்களுக்கு எப்படியாவது சம்பளம் கொடுக்கப் பட்டாக வேண்டும்; அதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை தனியாக எடுக்க இருக்கிறது என்று சொன்னால், உபயோகமாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அந்தப் பற்றுக்குறையை ஈடுகட்டுவதற்கு பொதுக்கணக்கில் சுமார் 11 லட்ச ரூபாய் இருக்கிறது, அதிலிருந்து பற்றுக்குறையை நிறைவுசெய்து கொள்ளலாம் என்று

கோரப்படுகிறது. அந்த வகையில் நிறைவுசெய்துகொள்ளுவதற்கு அனுமதி கேட்பார்களானல், இரண்டு துறைக்கும் நானே அமைச்சராக இருக்கிற காரணத்தால், அனுமதி அளிக்கத் தயாராயிருக்கிறேன். அதற்கான முயற்சியை அந்த நகராட்சிமன்றம் மேற்கொள்ள வேண்டும் என்ற அளவுக்கு கருத்து அறிவிக்கப்பட்டிருக்கிறது.

(2) EXORBITANT PRICE CHARGED FOR SUGAR IN THE OPEN MARKET AND THE CONSEQUENT DISTRESS CAUSED TO DRUG INDUSTRY IN STATE.

THIRU G. SWAMINATHAN : I wish to call the attention of the Hon. the Minister for Food and Revenue to a matter of urgent public importance, namely, the exorbitant price charged for sugar in the open market and the consequent distress caused to the Drug Industry in the State.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, சர்க்கரை விலை, போக்குவரத்து வழங்கல் மீதுள்ள கட்டுப்பாட்டை இந்திய அரசு 25—5—1971 முதற்கொண்டு நீக்கியது. சர்க்கரையின் இருப்பு வழங்கல் நிலை அப்பொழுது மனநிறைவளிப்பதாக இருந்ததே இதன் காரணமாகும். 1972-ஆம் ஆண்டில் சர்க்கரை உற்பத்தி குறைந்ததனுலும், ஆலைகளிலிருந்து சர்க்கரை குறைந்த அளவில் வெளியிடப்பட்டதனுலும் அங்காடி விலையைப் பாதித்து துணிகர வியாபாரத்திற்கு வழி வகுத்தது எனத் தோன்றுகிறது. எனவே, 1971 அக்டோபர் திங்களில் சர்க்கரை விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 180 ஆக இருந்திருக்க, இவ்விலை 1971 டிசம்பர் இறுதிக்குள் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 500 ஆக உயர்ந்தது. 1971 டிசம்பர் திங்களில் இந்த அரசு இம்மாநிலத்தில் உள்ள ஆலைகளின் இசைவுடன், ஆலைகள் விற்பனைக்காக வெளியிடும் சர்க்கரையில் 10 சதவிதத்தை 1971 டிசம்பர் திங்களில் எடுத்துக்கொண்டு, அதனை கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் கிலோ ஒன்றுக்கு ரூ. 2 வீதம் விற்பனை செய்ய ஏற்பாடு செய்தது. 1972 ஜனவரித் திங்கள் முதற்கொண்டு இந்திய அரசு ஆலைகளுடன் செய்துகொண்டுள்ள ஏற்பாட்டிற்கிணங்க, ஒவ்வோர் ஆலையிலிருந்தும் வெளியிடப்படும் சர்க்கரையில் 60 சதவிதத்தை, குவின்டால் ஒன்றுக்கு ரூ. 150 வீதம் ஆலை வாயில் விலையில் வழங்குவதற்காக, எடுத்துக்கொண்டுள்ளது. 1972 ஜனவரித் திங்களில் இம்மாநிலத்திற்கு 9,800 டன்னும் 1972 பிப்ரவரித் திங்களுக்காக 9,700 டன்னும் ஒதுக்கப்பட்டன. கிலோ ஒன்றுக்கு ரூ. 2 வீதம் மாநிலமெங்கணும் ஒரு சீராகப் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுவதற்காக அரசு சர்க்கரையை அனுமதி பெற்ற சில்லறை விற்பனைக் கடைகள் மூலம் வெளியிடுகின்றது.

நியாயமான அளவில் சர்க்கரை வழங்கப்படுவதற்காக இம்மாநிலத்தில் உள்ள குடும்பங்கள் அனைத்துக்கும் அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த ஏற்பாட்டின் கீழ் மாநிலம் முழுவதிலும் குடும்பம் ஒன்றுக்கு ஒரு கிலோ வீதம் சர்க்கரை பகிர்ந்தளிக்கப்படுவதற்கு வகை செய்யப்படுகிறது. அதிக வருவாய் உள்ள குடும்பத்தினர் பொதுவாக அதிக அளவு சர்க்கரையைப் பயன்படுத்துகின்றனர். இவர்களுக்கு 2 முதல் 3 கிலோ வரையில் பங்கீட்டு அளவை அதிகரிப்பதற்காக இதில் சிறிதளவு மிச்சப்படுத்தப்படுகிறது. அதிக வருவாய் உள்ள குடும்பங்களின் முழுத் தேவையையும் அரசால் ஈடுசெய்ய